# DFCC Pay Merchant App விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

**கீழுள்ள "I Accept" பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வணிகர் பின்வருவனவற்றை ஏற்றுக்கொண்டு ஊர்ஜிதம் செய்கின்றார்:**

**இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் DFCC Pay Merchant App வசதியின் விபரங்களும் வணிகருக்கு விளங்கப்படுத்தப்பட்டன. வணிகர் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் மேற்படி விபரங்களையும் வாசித்து, புரிந்துகொண்டு, இணங்கியுள்ளதோடு அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவும் சம்மதிக்கின்றார்.**

## 1. வரைவிலக்கணங்கள்

வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், இந்த ஆவணத்திலும் DFCC Pay Merchant App உபயோகம் தொடர்பிலும்:

**வாடிக்கையாளர்** என்பது மொபைல் சாதனம் ஒன்றின் மூலம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் ஓர் அட்டை வைப்பாளரை அல்லது கணக்கு வைப்பாளரைக் குறிக்கும். இது ஒரு வங்கிக் கணக்காக அல்லது நிதி நிறுவனம் ஒன்றினால் அல்லது தனியுரிமக் கொடுப்பனவு APP ஒன்றினால் வழங்கப்பட்ட பற்று அட்டையாக அல்லது கடன் அட்டையாக இருக்கலாம்.

**வணிகர்** என்பது DFCC வங்கியில் பதிவு செய்துகொண்ட மற்றும் வங்கியினால் வழங்கப்படும் QR அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுக்கொள்ளும் வசதி கொண்ட ஒரு வணிகரைக் குறிக்கும்.

**QR குறியீடு** என்பது QR பெறுநர் ஒருவரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக வங்கியினால் உருவாக்கப்படும் தனித்துவமான இரு பரிமாணப் பட்டிக் குறியீட்டைக் குறிக்கும். இது நிலையான QR மற்றும் மாறுபடும் QR என்று இரு வகைப்படும்.

**QR கொடுக்கல் வாங்கல்** என்பது QR சேவையைப் பயன்படுத்தி QR குறியீட்டின் மூலம் பெறுநருடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கலைக் குறிக்கும்.

**மொபைல் இலக்கம்** என்பது DFCC Pay Merchant அமைப்பில் பதிவுசெய்துகொள்ளும் நோக்கத்திற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் வணிகரினால் வழங்கப்படும் மொபைல் இலக்கத்தைக் குறிக்கும்.

**Scan to Pay** என்பது வணிகரின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு QR குறியீட்டை வாடிக்கையாளர் ''ஸ்கேன்'' செய்வதைக் குறிக்கும். தொகையானது வணிகரினால் கோரப்படலாம் அல்லது வாடிக்கையாளர் அதனை கொடுப்பனவு APPஇல் உள்ளீடு செய்யலாம்.,

**பயனர் பெயர்** என்பது QR appஐ அணுகுவதற்கு வணிகர் பயன்படுத்தும் பெயரைக் குறிக்கும்.

**PIN** என்பது QR appஐ அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கத்தைக் குறிக்கும்.

## 2. DFCC Pay App தீர்வு

வாடிக்கையாளர் ஒருவர் தனது மொபைல் சாதனத்தின் மூலம் QR ஒன்றை ''ஸ்கேன்'' செய்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இடமளிக்கும் விதத்தில் DFCC Pay Merchant App தீர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டதொரு கணக்கிலிருந்து வணிகரின் கணக்கிற்கு நேரடியாகக் கொடுப்பனவுகளைச் செய்ய இக் கொடுப்பனவு வசதி இடமளிக்கின்றது.

QR கொடுப்பனவுத் தீர்வுக்கு மொபைல் சாதனமொன்றைத் தவிர வேறெந்த மேலதிக வன்பொருளும் தேவையில்லை. ஆகவே, இது எளிதானது, பாதுகாப்பானது மற்றும் விரைவானது. டேட்டா இணைப்புடன் android வசதி கொண்ட எந்தவொரு ஸ்மார்ட் ∴போன் மூலமும் QR கொடுப்பனவு வசதியைப் பயன்படுத்தலாம்.

இந்த DFCC Pay இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் வங்கியின் வணிகர் ஒப்பந்தத்தினால் ஆட்சி செய்யப்படும். வாடிக்கையாளர் Appஇன் செயற்பாடானது வாடிக்கையாளர்களுக்கான வங்கியின் வழிகாட்டுநெறிகளினால் ஆட்சி செய்யப்படும்.

கொடுக்கல் வாங்கல்கள் மீது வரையறைகளை விதிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

3. **DFCC Merchant Pay Merchant Appஇன் ஆரம்பம்**

வணிகர் DFCC Merchant ஒன்றையும் விண்ணப்பம் ஒன்றையும் நிரப்பிக் கையளிப்பதுடன், இந்த வசதிக்காக DFCC வங்கி பி.எல்.சி.யிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். வங்கியானது Appஐ மாத்திரமன்றி வணிக நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்படுவதற்காக அச்சிடப்பட்ட நிலையான QR ஒன்றையும் வணிகருக்கு வழங்கும்.

நிலையான QR மற்றும் மாறுபடும் QR ஆகிய இரண்டின் மூலமும் வணிகர் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம்.

**4. பயனர் ID மற்றும் கடவுச்சொற்கள்**

a) பயனார் ID ஆனது வணிகரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு வங்கியினால் அனுப்பப்படும்.

b) கடவுச்சொற்கள் தன்னியல்பாகவே வணிகரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு வங்கியினால் அனுப்பப்படும். கடவுச்சொல்லானது பாதுகாக்கப்பட்ட தாள் ஒன்றில் இருக்கும். அக் கோப்பினை (File) திறப்பதற்கு, வணிகர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட அடையாள இலக்கத்தை வழங்க வேண்டும்.

c) அத்தகைய விபரங்களின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்தும் பொறுப்பு வணிகரைச் சார்ந்ததாகும்.

**5. DFCC Pay app பயன்படுத்துநராக வருவதற்குரிய தகுதிகள்**

ஒரு வணிகர் என்று வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க எந்தவொரு தனிநபரும் நிறுவனமும் இதற்குத் தகுதி பெறலாம். வணிகரின் வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆதார ஆவணங்களை வங்கி கோரும்.

**6. DFCC Pay Merchant App மூலம் கொடுக்கல் வாங்கல் செய்தல்**

வணிகர் QR ஒன்றின் ஊடாகக் கொடுப்பனவை ஏற்றுக்கொள்வதற்கு மிகப் பாதுகாப்பான மொபைல் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் ஆரம்பத் தளத்தினை மொபைல் தொழில்நுட்பம் வழங்குகின்றது. வாடிக்கையாளருக்குக் QR ஒன்றைவழங்குவதன் மூலம் வணிகர் எந்த நேரமும் எந்த இடத்திலிருந்தும் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளலாம்.

a) வணிகர் எந்த நேரமும் எந்த இடத்திலும் பணத்தைக் கையாளாமலே கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம்.

b) QR கொடுப்பனவு வசதி விரைவானது, இலகுவானது மற்றும் பரிசோதிப்பு நேரமும் குறைவு.

c) கொடுப்பனவுகள் நேரடியாக உங்கள் கணக்கிற்குச் செல்வதால், மோசடி மற்றும் திருட்டிலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள்.

d) காசுப் பாய்ச்சலை இலகுவாக முகாமைத்துவம் செய்வதற்கு, ஒருசில படிகளில் கொடுக்கல் வாங்கல் வரலாற்றை அறிந்துகொள்ளலாம்.

**7. வணிகர் பொறுப்பேற்க வேண்டிய விடயங்கள்**

a) மொபைல் சாதனத்தின் பாதுகாப்பு வணிகரின் பொறுப்பாகும்.

b)வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளின் இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பை வணிகர் பேண வேண்டும்.

c) ஏதேனும் மொபைல் சாதனம் தொலையும் பட்சத்தில் மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் கணக்கின் இரகசியத் தன்மை அல்லது பாதுகாப்பிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் அல்லது ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்று கருதப்படும் சந்தர்ப்பங்களில், அது பற்றி உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவருவது வணிகரின் தனிப் பொறுப்பாகும். பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு வணிகர் வங்கிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

d)வணிகரின் கணக்கை அணுகுவதற்கு வணிகரினால் அனுமதிக்கப்பட்ட இன்னுமொரு நபரினால் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் வணிகர் பொறுப்பாளியாவார்.

e) DFCC Pay அமைப்புத் தொடர்பான வங்கியின் விளம்பர சாதனங்களை இலத்திரனியல் ரீதியாகக் காட்சிப்படுத்தவும் காலத்திற்குக் காலம் SMS மூலமான ஊக்குவிப்பு விளம்பரங்களை மேற்கொள்ளவும் வங்கி உரிமை கொண்டுள்ளது.

f) வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட வணிகர் ஒப்பந்தம் மற்றும் அதன் விதிகள், நிபந்தனைகள் அனைத்தையும் வணிகர் அனுசரித்து நடக்க வேண்டும்.

**8.மொபைல் சாதனங்களின் தொலைவு பற்றி அறிவித்தல்**

மொபைல் சாதனமொன்று தொலையும் பட்சத்தில், அதன் காரணமாக ஏதேனும் பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உண்டெனக் கருதப்பட்டால், வணிகர் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். App கடவுச்சொல் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுவதையும் அதன் விபரங்கள் வேறெவருக்கும் தெரிவிக்கப்படாதிருப்பதையும் வணிகர் உறுதிசெய்ய வேண்டும்.

**9. அறிவுறுத்தல்கள் மற்றும் ஊர்ஜிதப்படுத்தல்கள்**

வணிகரினால் வங்கிக்கு அனுப்பப்படும் அறிவுறுத்தல்கள், குறித்துரைக்கப்பட்டட முறையில், வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் ஒருவரினால் பெறப்படும்போது மாத்திரமே வங்கிக்குக் கிடைத்துள்ளதாகக் கருதப்படும். அத்தகைய அறிவுறுத்தல் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வங்கிக்கு நியாயமான காலம் தேவைப்படும்.

**10. சர்ச்சைகளுக்குத் தீர்வுகாணுதல்**

ஏதேனும் சர்ச்சை எழும் பட்சத்தில், வணிகர் அது பற்றி வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய சர்ச்சை சம்பந்தமாகத் தொடர்பு இலக்கம் ஒன்றை வங்கி ஒதுக்கும். அத்துடன், கொடுப்பனவுத் திட்டங்கள்/அட்டை வைத்திருப்போர் ஒப்பந்தம் தொடர்பான சட்டங்களுக்கு அமைவாகப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மிகச் சிறந்த முயற்சிகளையும் அது மேற்கொள்ளும்.

**11. முடிவுறுத்தல்**

a) DFCC Pay Merchant App கணக்கின் பாவனையை முடிவுறுத்த வாடிக்கையாளர் விரும்பினால், அவர் அது பற்றி வங்கிக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும். அத்துடன், அவ்வாறான முடிவுறுத்தல் இடம்பெறுவதற்கு முன்னர், பொருத்தமான ஏதேனும் கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகள் மற்றும் நிலுவையாகவுள்ள அறவீடுகள், கடன்கள், சேகரிப்புகள், கொடுக்கல் வாங்கல்களையும் அவர் செலுத்த வேண்டும்.

b) வங்கியானது தனது தற்றுணிபின் பேரிலும் நியாயமான காரணத்திற்காக முன்னறிவித்தல் கொடுக்காமலும் கணக்கை முடிவுறுத்த, இடைநிறுத்த அல்லது அதன் மீது வரையறையை விதிக்க உரிமை கொண்டுள்ளது.

**நான் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்துப் புரிந்துகொண்டதுடன், எப்போதும் அவற்றை அனுசரித்து நடக்கவும் இணங்குகின்றேன்.**